# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Multidisilinary Journal )

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


Vol:6 Issue :24 October 2024

கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


**இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்**
இரா.பிரதீப் ராஜ்

**திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**
முனைவர் இரா. யசோதா

**ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை**
மு.கயல்விழி

**காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்**
முனைவர் க. ஜவகர்

**இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்**
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

**விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"**
கோ. அசோகன்

**காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்**
க.பிரியா

**சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்**
மு.முத்துமாரி

**நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்**
கு.வருதராஜ்

**திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்**
முனைவர் ஆ. கவிதாராணி

**கதை பேசும் ஆடல் கலையான கதகளி**
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

**நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்**
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை

## (Infidelity Admonished in Thirukkural and Nalatiyar)

**மு.கயல்விழி,** முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்). தமிழாய்வுத் துறை, தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர் **மற்றும்** உதவிப் பேராசிரியர் (தமிழ்த் துறை), எம்.எம்.இ.எஸ் மகளிர் கல்லூரி, மேல்விஷாரம், தமிழ்நாடு, இந்தியா

நெறியாளர்**:முனைவர்வீ.தனலட்சுமி,**உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத் துறை, தந்தை ஹான்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகில் உள்ள சிறப்புகளில் சிறந்தது கற்புநெறி நின்று வாழ்தலேயாகும். இது தமிழருக்கே உரித்தான தனிச்சிறப்பாகும். ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு ஒழுக்க நெறியில் நின்று வாழ்தலே வாழ்வின் நோக்கமாகும். இல்வாழ்வில் இன்புற்று இருத்தலைப் பெரிதும் வலியுறுத்தும். இலக்கியங்கள் கற்பு நெறிக்கும் ஒழுக்க வாழ்விற்கும் அதிமுக்கியத்துவம் நல்கின. பெண்டிரைப் போன்றே ஆண்மகனும் கற்பு நெறியுடன் வாழத் தமிழிலக்கியங்கள் வலியுறுத்தின. பிறமணமான மகளிரை விரும்பாத கற்பு நிலையைப் “பேராண்மை நிலை” என்று அவை சிறப்பித்தன. பிற மகளிரை நாடிச்செல்வதால் தோன்றும் இழிநிலையை அவை மானிடர்க்கு எடுத்தோதுகின்றன. குறிப்பாக அறநெறி வாழ்வைப் பெரிதும் வலியுறுத்தும் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் இவ்வாறான ஒழுக்க நெறியைப் போதித்தன. தமிழிலக்கியத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த திருக்குறளும் நாலடியாரும் பிறன்மனை நோக்காப் பெருவாழ்வை வலியுறுத்திப் போதித்து ஒழுக்க நெறி மிகுந்த தமிழ்ச்சமுதாயத்தை உருவாக்க முனைந்தன.

**திறவுச் சொற்கள்**

கற்பு நெறி, இல்வாழ்க்கை, பிறன் மனைநயக்கும் பெருங்கேடு, ஒழுக்க வாழ்வு, மேம்பட்ட நிலை.

## Abstract

*Infidelity is ethical problem for human beings. It is especially rejected and shunned by Tamil people. The primary aim of married couples is having trust in one another and having a disciplined life. Our literary works insist a disciplined life and it advices both male and female to completely reject adultery. Our ancient literary works says that chastity is the highest power in the life of male. The ancient ethical work Pathinen Kezhkanakku insist to follow Chastity outside of marriage for both male and female in their life. The esteemed ancient Tamil literary works Thirukkural and Nalatiyar gave much important to the above and expect a good Tamil society.*

## Key Words

*Chastity, human being, male and female, good society, literary works, disciplined society*

**முகவுரை**

உலக உயிர்களில் மனிதனே உயர்வானவன். அவனுடைய அறிவுத்திறன் அவனைப் பிற உயிர்களினின்று வேறுபடுத்திக் காட்டியதுடன் அவைகளை வெல்லவும் உறுதுணை

புரிந்தது. இந்த அறிவுத்திறன் மேம்பாடு அவனை நல்வழியில் கொண்டு சென்று மேம்படச் செய்ய வேண்டும் என்று ஆன்றோர்கள் அவாவுற்றனர். வாழ்வில் நல்லன யாவை, தீயன யாவை என்று அவர்களை ஆற்றுப்படுத்தி நல்லறிவு புகட்டி நல்வழிப்படுத்தினர். இவ்வாறான அறிவுரை நூல்களே தமிழில் அறநூல்கள் என்பனவாம். தமிழில் தோன்றிய அறநூல்களில் முதன்மையானது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாம். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலத்தை ‘‘அறநூல்களின் காலம்’’ என்று அழைக்கப்படுகின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மனிதருக்கு இன்றியமையாத பல்வகையான வாழ்வியல் நெறிகளை ஓதி உணர்த்துகின்றன. அவற்றில் சிறப்பான ஒழுக்கநெறியாம் பிறன்மனை நோக்காமல் வாழும் செவ்விய வாழ்வியல் நெறி குறித்துத் தனிப்படப் பேசுகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறப்பான திருக்குறளும் நாலடியாரும் இதுகுறித்துச் சிறப்புடன் பேசுகின்றன. அவற்றைப் பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பேராண்மை எனப்படுவது யாதெனில்...**

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்க நெறியே பொதுவாகப் பண்டு தொட்டுத் தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்தது. ஆண், பெண் பாலினப் பாகுபாடு பொதுவில் சங்க காலத்தில் காணப்பெறவில்லை. ஆண் உயர்ந்தவன் பெண் தாழ்ந்தவள் என்ற பாலினப் பாகுபாடும் காணப்பெறவில்லை. ஆண் பெண் கூடிவாழும் இல்வாழ்க்கை நெறி சிறப்பானதாகக் கருதப்பட்டது. ஆணொருவன் தனக்கு ஏற்றத் துணையான ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து இல்வாழ்க்கை நடத்துதலே அக்கால வழக்காய்த் திகழ்ந்தது. ஆண் பெண் இருபாலரும் கற்புநெறியைப் போற்றிப் புரந்தனர். ஒழுக்க நெறி இருபாலருக்கும் பொதுவானதாகவே கருதப்பட்டது. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் இந்நிலை மாறிற்று. தமிழ்ச் சமுதாயத்தில் சமூகச் சீர்கேடுகள் தோன்றின. எனவே மக்களை நல்வழிப்படுத்த அறநூல்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின. இந்நூல்கள் கற்புநெறியைப் பெரிதும் வலியுறுத்தின. இக்காலத்தைச் சார்ந்த வள்ளுவப் பெருந்தகையாளர் தமது திருக்குறளில் பிற ஆடவரின் துணைவியராகிய பெண்டிரை நேசிக்கும் பிறன்மனை நயத்தலை அடியோடு வெறுத்தார். இதற்கென தனி அதிகாரம் வகுத்தளித்து இப்புண்மையை தமிழர்களுக்கு உணர்த்தினார். ‘‘இல்லறவியல்’’ என்ற இயலில் பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தை வகுத்தளித்தார். பிறருடைய மனைவியரை நேசிக்கும் பண்பானது நன்கு கற்ற சான்றோரிடத்துக் காணப்படாது. அவ்வாறு செயல்புரிபவர்கள் விலங்குகளுக்கு ஒப்பான கடைநிலை மாந்தர்கள் என்பதுடன் அவர்கள் விலங்கினும் கீழானவர்களாகவே கருதுகின்றார். அவர்களைப் ‘‘பேதைகள்’’ என்றும் எள்ளி நகையாடுகின்றார்.

‘‘அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல’’ (குறள்:142)

அவர்களைப் பேதைகள் என்றும் உரைப்பதுடன் நின்றுவிடாமல் அவர்களைப் பிணத்திற்கு ஒப்பானவர்களாகவும் கருதுகின்றார். உயர்ந்த நிலையில் உள்ள மனிதர்கள் கூடப் பிறன் மனையை நயந்தால் மிகவும் கீழான நிலையை நிச்சயம் அடைவார்கள் என்று எச்சரிக்கின்றார்.

‘‘எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்’’ (குறள்:144)

பிறருடைய மனைவியை நேசிப்பவர்கள் பல்வேறு பெரும் கேட்டினை அடைவதுடன் தீராத பழிச்சொல்லுக்கும் ஆளாவார்கள். அவர்களைப் பகை, தீமை, அச்சம், பழி முதலிய பெருங்கேடுகள் தானாக வந்து சேரும். அறநெறியில் நிற்கும் சான்றோர் பிறருடைய மனைவியை நோக்காத பெரும் குணத்தைக் கைக்கொள்ள வேண்டும். உலகில் உள்ள ஆண்மை யாவற்றிலும் மேலானது பிறன் மனைவியை நயத்தாமல் இருக்கும் மன உறுதியாகும் என்று ஆண்மைக்குப் புது இலக்கணம் வகுக்கின்றார்.

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

அறனொன்றோ ஆன்ற வொழுக்கு'' (குறள்:148)

மனிதன் தான் அடைதற்குரிய பெரும் பேறுகள் யாவும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டுப் பிறர் மனைவியைத் தீண்டாத ஒழுக்க நெறியில் நின்றலேயாகும். பெரியோர் சொற்படி வாழ்ந்து வந்தால் இவ்வுலகில் உள்ள அனைத்து நற்பேறுகளும் அவர்களைத் தானாகவே சென்றடையும். மேலும் அறவழியில் செல்லாத கொடியவர்கள் செய்யும் தீச்செயல்கள் யாவற்றிலும் பெரியது பிறன் மனைவியை நேசிக்கும் பெருங்குற்றமாகும் என்று வலியுறுத்திச் செல்கின்றார்.

''அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்

பெண்மை நயவாமை நன்று'' (குறள்:150)

இல்வாழ்வில் தன் மனைவியுடன் கூடிய இன்புற்று அறத்தைப் பேணி வாழ்தலே மனிதருக்குச் சிறப்பு என்பதுடன் அவன் காம வசப்பட்டுக் கட்டு மீறி நடக்கலாகாது என்று திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். உலகில் மிகவும் கொடியது காமம் என்பதால் இதைப் பொறையுடைமை என்ற அதிகாரத்திற்குப் பின்னர் வகுத்தளித்தார்.

**நாலடியாரில் நல்லறம்**

பிறர் மனைவியை நேசிக்கும் குற்றத்தைத் திருக்குறளைப் போன்று நாலடியாரும் பெரும் குற்றமாகக் கருதுகின்றது. பிறருடைய மனைவியை நாடிச் செல்பவருக்கு மிகுந்த அச்சம் தோன்றுவதுடன் அதனால் கிடைக்கப்பெறும் சிற்றின்பம் மிகவும் குறைவானதேயாகும். மேலும் அவ்வாறு சென்றாலும் அச்செயல் கொலை குற்றத்திற்கு ஒப்பானதாகும். அது அவனை முடிவிலாத கொடிய நரகத்தில் ஆழ்த்தி விடும். எனவே எந்நாளும் நாணதற்குரிய அச்செயலைச் செய்யலாகாது என்று நாலடியார் எச்சரிக்கின்றது.

''அச்சம் பெரிதால்; அதற்கின்பம் சிற்றளவால்;

நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்;- நிச்சலும்

கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்

நம்பற்க,நாணுடையார்''

(நாலடியார்:81)

பிறன் மனைவியை நயந்து செல்பவர்களை அறம், புகழ், நட்பு, பெருமை முதலிய சிறப்புகள் நீங்குவதுடன் அவர்களைப் பகை, பழி, பாவம், அச்சம் முதலிய பெருங்கேடுகள் நீங்காமல் வந்தடையும். இம்மை, மறுமை இரண்டிலும் இதனால்

பெருந்துன்பமே தோன்றும். இது போன்ற கீழான செயல்களைச் செய்யும் பொழுது இன்பம் வந்துறாது, மாறாக அவற்றால் அச்சமே மேலோங்கி நிற்கும். அத்தகையோர் தான் நாடிநிற்கும் சிற்றின்பத்தை அச்சமின்றித் துய்க்கவியலாது. இவ்வாறு எல்லாவகையிலும் துன்பத்தினையே தரும் இவ்விழிச்செயலை யாண்டும் எப்பொழுதும் செய்யலாகாது என்று என்று நாலடியார் வலியுறுத்துகின்றது.

"புக்கவிடத்து அச்சம், போதரும் போதச்சம்,
துய்க்கும் இடத்தச்சம், தோன்றாமற் காப்பச்சம்;;
எக்காதலும் அச்சம் தருமால்; எவன்கொலோ
உடகான் பிறனில் புகல்?" (நாலடியார்: 83)

மனிதன் வாழ்வு நிலையில்லாதது, எனவே அவன் பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ வேண்டும். நல்லனவற்றை நாடிச் செய்ய வேண்டும். தீயனவற்றை யாண்டும் புறந்தள்ள வேண்டும். இம்மை மறுமை இரண்டிற்கும் சிறப்பானவற்றைத் தேடிச்சேர்க்க வேண்டும். பிறர் மனைவியைத் தேடி அடையும் செயலால் கிடைக்கும் முடிவான பயன் யாதென்றால் அவனுக்குப் பெரும் பழிச்சொல் ஏற்படும், அச்சம் மிகுதியாகத் தோன்றும், இதனால் ஏற்படும் இடர்ப்பாடுகள் அவனுக்கு நரக வேதனையைக் கொண்டு கூட்டும். இவற்றின் முடிவான பலன் இன்பத்தைக் காட்டிலும் துன்பமே மிகுவதாகும். எனவே இந்த தீச்செயலை எப்பொழுதும் செய்யலாகாது என்று நாலடியார் மானிடருக்கு அறிவுறுத்துகின்றது.

"காணிற் குடிப்பழியாம்; கையுறிற், கால்குறையும்;
மாணின்மை செய்யுங்கால், அச்சமாம்;- நீணிரயத்
துன்பம் பயக்குமால்; துச்சாரி! நீ கண்ட
இன்பம், எனக்கெனைத்தால்? கூறு" (நாலடியார்:84)

**பிறன்மனை நயத்தலின் பெருங்கேடு**

பிறர் மனைவியை நேசிப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் கேடுருவர். அத்தகையவர்கள் அடுத்த பிறவியில் ஆண்மைத் தன்மை இழந்து அவமானம் அடைவர். பெருங்கேடு அவர்களை நீங்காமல் அடையும். அவர்கள் பிச்சைக்காரர்களை விடக் கீழான நிலையை அடைவார்கள். எனவே ஒருவன் தனக்குப் பொருத்தமான ஒருத்தியைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொண்டு அவளுடன் இல்வாழ்க்கையைத் துய்த்து இன்புறுவதே சிறப்பாகும். மேலும் தன்னை நம்பி வாழ்க்கையில் இணைந்த மனைவியைத் தவிக்க விட்டுப் பிறர்மனை நாடிச் செல்வது பெரும் பாவத்திற்கும் நீங்காப் பழிக்கும் இடம் தருவதாகும். இவ்வாறான கொடிய செயலை அறிவுடைய பெருமக்கள் ஒருபோதும் செய்யத் துணியார். இதுதவிர மனைவியை இழந்து துன்புறும் ஒருவர் வினைவசத்தாலும் விதிவசத்தாலும் தவறியேனும் எச்சூழலிலும் பிறர் மனைவியை விரும்பக் கூடாது. இது கீழ்க்கண்ட பாடலால் அறியப்படுகின்றது:

"பல்லார் அறியப் பறையறைந்து, நாள்கேட்டுக்,
கல்யாணஞ் செய்து, கடிபுக்க- மெல்லியல்

காதன் மனையாளும் இல்லாள், என்னொருவன்

ஏதின் மனையாளை நோக்கு?" (நாலடியார்:86)

இவ்வாறாகப் பிறன் மனையை நேசிக்கும் பெரும் குற்றம் இழைப்பவர்களுக்குப் பெரும் பழி வந்துசேரும், உறவினர்கள் அவரை தூற்றுவர். எனவே சிறப்புடன் மனித வாழ்க்கையை வாழ விரும்பும் எவரும் இப்பழியைச் சுமக்கலாகாது என்று நாலடியார் வலியுறுத்துகின்றது. மேலும் கணவனை மதியாது காமவசப்பட்டு நடக்கும் ஒழுக்கக்கேடான பெண்களின் தொடர்பு கொடிய விஷமுடைய பாம்பினை ஒருவர் முத்தமிடுதலுக்கு ஒப்பாகும். தற்காலிக இன்பத்திற்கு ஆசைப்பட்டுக் கொடிய கேட்டினை அடையும் நிலையே அவர்களுக்கு ஏற்படும் என்று அழகாக எடுத்துரைக்கின்றது.

" பாம்பின் தலைநக்கி யன்னது உடைத்து" (நாலடியார்:87:3-4)

இவ்வாறு பல வகையிலும் மனிதருக்குப் பெருங்கேட்டைத் தரும் பிறன்மனை நேசித்தலுக்கு உந்துசக்தியாக விளங்கக்கூடிய காமம் மிகவும் வன்மை வாய்ந்தது, கொடியது. அது அறிவாளிகளையும் மயங்கச் செய்துவிடும், தவமுனிவரையும் தடுமாறச் செய்துவிடும். உள்ளத்தில் உறுதி உடையவர்களையும் நிலைமாறச் செய்துவிடும். எனவே அறிவுடைய சான்றோர்கள் வினை வயதாலும் காலச்சூழலாலும் சந்தர்ப்ப வசத்தாலும் பிறர் மனைவியை நேசிக்கும் நிலை ஏற்பட்டாலும் அதற்கு இரையாகாமல் காமத்தை வென்று தம்முடைய அறிவைப் பயன்படுத்தி நன்னெறியில் நடக்க வேண்டும். காமம் கொடிய வேதனையைத் தருமென்றாலும் அவற்றைப் பொறுத்து அடக்கியாண்டு பொறிகளை நல்வழிப்படுத்த வேண்டியது அறிவுடையோர்க்கு அணியாகும். காமத்தின் வன்மையை நாலடியார் கீழ்க்கண்டவாறு அழகுடன் எடுத்துரைக்கின்றது:

"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு

நீருள் குளித்தும் உயலாகும்;- நீருள்

குளிப்பினும், காமம் சுடுமே, குன்றேறி

ஒளிப்பினும், காமம் சுடுமே" (நாலடியார்:90)

**நிறைவுரை**

ஒத்த ஆணும் பெண்ணும் ஒழுக்க நெறியில் நின்று வாழ்வதே கற்பு என்னும் அறமாகும். ஆணும் பெண்ணும் சமம் என்பதால் கற்பென்னும் ஒழுக்க நெறியை இரு பாலருக்கும் பொதுவானதாகச் சான்றோர்கள் வைத்தார்கள். எனவேதான் பாரதி போன்ற மகாகவிகள் கற்பு என்பதைப் பொதுவில் வைப்போம் என்று கூறிச்சென்றனர். கற்புநெறி வாய்ந்த தமிழ்ச்சமூகத்தை அவர் விரும்பினார்.

"கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு

கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"

(பெண்கள் விடுதலைக்கும்மி செய்யுள்:5)

*"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்*

*அப்போது பெண்மையும் கற்பு அழிந்திடாதோ?"*

*(பாரதி அறுபத்தாறு:56)*

*இவற்றால் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் கற்புடையவர்களாகத் திகழ வேண்டும் என்று அவர் உணர்த்துகின்றார். கம்பர் பெருமானும் இராமபிரான் மூலமாகக் கம்பராமாயணத்தில் பிறன்மனை நோக்காமையின் சிறப்பை உலகிற்கு எடுத்துரைக்கின்றார். இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று கூறித் தன் பிறன்மனை நோக்காத பேராண்மை நிலையை உலகிற்கு உணர்த்துவார்.*

*"வந்து எனைக் கரம் பற்றிய வைகலவாய்*

*இந்த, இப்பிறவிக்கு இரு மாதரைச்*

*சிந்தையாலும் தொடேன், என்ற செவ் வரம்"*

*(கம்ப இராமாயணம், சுந்தரகாண்டம், சூடாமணிப் படலம்:34)*

*சிலப்பதிகாரமும் பிற பெண்டிரை நாடிச்செல்லும் மனிதருக்கு நிகழக்கூடிய பெருங்கேட்டை எடுத்துரைக்கும். இதுபோன்று எல்லாவகையிலும் கேடுகளை மட்டுமே அளிக்கும் பிற பெண்டிரை நாடிச் செல்லும் போக்கை மனிதர்கள் முற்றாகத் துறக்க வேண்டும் என்பதற்காகக் கற்பு நெறியை ஆண் பெண் இருபாலருக்கும் நம் ஆன்றோர்கள் வகுத்தளித்தனர். ஒரு ஆண் பிறன் மனைவியை நாடிச்செல்வதால் தன் குடும்பம் சீர்கேடு அடைவதற்கும் காரணமாய் அமைவதோடல்லாமல் சார்ந்த அப்பெண்ணின் குடும்பம் சிதைவதற்கும் காரணமாக அமைகின்றான். இவ்வாறு பல குடும்பச் சிதைவுகளுக்கும் சமூகச் சீர்கேடுகளுக்கு ஒழுக்க வீழ்ச்சிக்கும் காரணமான பிறன்மனை நயத்தலை அறிவில் சிறந்த நம் ஆன்றோர்கள் ஒருத்தனர். ஒழுக்க நெறிக்கும், நல்வாழ்விற்கும், மனிதகுல மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிப்பதற்காக எழுந்து சமூகத்தையும் நாட்டையும் சீர்திருத்திச் செம்மையுறச் செய்வதற்குத் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்கள் பிறன்மனை நோக்காமை என்ற சமூகச் சீர்கேட்டை மிகவும் ஆழமாகவும் அழுத்தமாகவும் அழகாகவும் வலியுறுத்திப் பதிவு செய்துவிட்டுச் சென்றுள்ளன.*

**கருவிநூற் பட்டியல்**

*1.திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1996*

*2.நாலடியார், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2021*

*3.கம்ப இராமாயணம், கம்பன் கழகம், சென்னை, 1976*

*4.பாரதியார் பாடல்கள், உமா பதிப்பகம், சென்னை, 2022*

*5.பாரதி அறுபத்தாறு, பாரதி பிரசுராலயம், சென்னை,1943*

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com